நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றது. கொடுக்கப் படுகின்ற அரிசியும் தரமானதாக இல்லை. ஒருவகையான துர்நாற்றம் அடிக்கக்கூடிய அரிசியாகத்தான் அது இருக் கின்றது. எனவே அந்த நிலைமையினை மாற்றி நல்ல வகையிலே வழங்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் அதிகரிக்கப் படும் என்று நான் சொல்லவில்லை. இருக்கின்ற அளவினை ஒழுங்காகக் கொடுத்துக்கொண்டு வந்தால் போதும் என்று தான் இருக்கிறோம். மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்தினருக்கு 20 கிலோ அரிசி தர வேண்டும் என்பதற்கு குறையாமல் இருப் பதற்கான வழிமுறைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். நாம் இங்கே பெறுகின்ற அரிசி, பிற மாநிலங்களில் இருந்து வாங்குகிற அரிசி, மத்திய அரசு நமக்கு ஒதுக்குகின்ற அரிசி ஆகியவற்றின் அடிப்படையில்தான் நாம் வழங்கிக்கொண்டு வருகிறோம்.

(முற்பகல் 9-20.)

பல ஆயிரக்கணக்கான டன் அரிசி உபயோகப்படுத்துகிறபோது சில பல இடங்களில் தரக்குறைவான அரிசி வந்துவிடுகிறது என்று குறிப்பிடுகிற நேரத்தில் உடனடியாக அதை மாற்றி தரமுள்ள அரிசி வழங்கவேண்டும் என்று பொதுவாக உத்தரவு இருக்கிறது. ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அந்த மாதிரி சூழ்நிலை இருக்குமானால் அரசு அலுவலர்களைக் கொண்டு அந்தக் குறைபாட்டை நீக்க தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தாம்பரம் தொகுதியிலுள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலம்.

*வினா எண். 162—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில், கோவிலம்பாக்கம் கிராமத் தில், புல எண். 435/1 மேய்க்கால் புறம்போக்கு சுமார் 45 ஏக்கர் நிலத்தில் திடீரென சிலர் குடிசைகள் போட்டு விற்பனை செய்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை உடனடியாக அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1983 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், (கொளத்தூர்) கிராமத்தில் புல எண். 435/1இல் மேய்க்கால் தரை புறம்போக்கில் 80 பேர் ஆக்கிரமித்துள்ளனர். குடிசைகள் போட்டு விற்பனை செய்கிறார்கள் என்பது உண்மையல்ல.

கோத்தகிரியில் வட்ட வருவாய் அலுவலகம் கட்டும் திட்டம்.

*வினா எண் 163—திரு, கே. உச்சி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தை சார்ந்த கோத்தகிரியில் வட்ட வருவாய் அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் வட்டாட்சியர் மற்றும் அதனைச் சார்ந்த அலுவலகங்களுக்குப் புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் 21.75 இலட்சம் செலவு செய்ய அரசு அனுமதித்துள்ளது.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, மலைப்பகுதியாக இருக்கிற கோத்தகிரியில் அரசுக்கு உரிய இடங்கள் கிடைப்பதும், கட்டிடங்கள் கிடைப்பதும் கடுமையாக இருக்கிற காரணத்தினால் இந்த வட்டாட்சியர் அலுவலகத்தினை கட்டித்தரும் பணியினை விரைவாக கட்டி முடித்துக் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு பராமரிப்பிலுள்ள அச்சேறாத பழஞ்சுவடிகள்.

*வினா எண். 25—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சேறாத பழஞ்சுவடிகள் அரசு பராமரிப்பில் ஏதேனும் உள்ளனவா ?

(ஆ) அவற்றை அச்சேற்ற என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அரசினர் கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகத்தின் புலவர்களைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு அவை வெளிவந்து கொண்டுள்ளன.

குமரி மாவட்டத்தில் கல்வித் துறைப் பள்ளிகளில் பணிபுரியும் பகுதிநேர ஊழியர்கள்.

*வினா எண். 26—திரு. டி. மணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கல்வித்துறையில் பள்ளிகளில் பகுதிநேர ஊழியர்களாக பணிபுரியும் ஊழியர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) இல்லையெனில் முழுநேர ஊழியர்களின் இடங்கள் காலி ஏற்படும் போது பகுதி நேர ஊழியர்களுக்கு தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) பகுதிநேர சில்லரைச் செலவின ஊழியர்களை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்ய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) பகுதிநேர சில்லரைச் செலவின ஊழியர்கள் தமிழ் நாடு அடிப்படைப் பணியிலுள்ள பணியிடங்களில் நியமனம் அல்லது பதவி உயர்வு மூலம் நியமனம் பெற தற்சமயமுள்ள விதிகளில் அனுமதி இல்லை.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தக் கல்வித்துறையில் பகுதி நேர ஊழியர்கள் இருக்கிறார்கள். யதேச்சையாக அவர்கள் முழு நேரமும் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே, என்னுடைய வேண்டுகோளும், கேள்வியும் என்னவென்றால்,